அமைப்புகள் இருக்கின்றன. அதன் விஷயம் வேறு. ஆகவே இன்றைக்கு அப்படி அமைப்புகள் இல்லாமல் கூலி பெறாமல் இருக்கக்கூடிய இடங்களில் தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்புகள் இல்லாமல் இல்லை. இப்போது எல்லா இடங்களிலுமே ஓரளவிற்கு அமைப்புகள் இருக்கின்றன. அதுவும் கிழக்குத் தஞ்சையில் நல்ல உறுதியான அமைப்பு இருக்கிறது. ஆகவேதான் அவர்களுக்கு நியாயம் கிடைக்காத காலங்களில் போராடிப் பெற்றார்கள். இப்போது போராடாம லேயே அவைகளைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். அதனால் குறிப்பிட்ட இடங்களில் அவர்கள் நிர்ணயித்தபடி கூலி பெறவில்லை என்று சொன்னால், உறுப்பினர்கள் அவர்கள் அதைக் குறிப்பிட்டுத் தெரிவிப்பார்களேயானால் அதற்கான தக்க வழி வழிகளை அரசு செய்யும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

தேனி, சின்னமனூர் நகராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டங்கள்.

***வினா எண் 52—திரு. வே. இரா. ஜெயராமன் :** மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனி, சின்னமனூர் நகராட்சிகளுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக தற்சமயம் ஆய்விலுள்ள, குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் (Improvement proposals) எப்போது எடுத்துக்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :—

தேனி—நடைபெற்று வரும் ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டபின் உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். அரசு ஒப்புதல் பெற்ற பின்னர் திட்டம் நிறைவேற்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சின்னமனூர் :—ஆய்வுப் பணிகள் முடிந்து, உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்படுகிறது. அது அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அரசின் ஒப்புதல் பெற்ற பின் நிறைவேற்றத் திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, அந்தப் பணிகள் விரைவாக நடப்பு ஆண்டிலேயே அமைப்பதற்கான முயற்சிகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?